செய்தி வெளியீடு எண்: 202 நாள் : 22.04.2016

# செய்தி வெளியீடு

## உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.10 லட்சம் மதிப்புள்ள லுங்கிகள் பறிமுதல். இதுவரைமொத்தம் ரூ.30.23 கோடி பறிமுதல்

*************

தமிழ்நாட்டில் தேர்தல் நடைமுறைகளையொட்டி, தேர்தல் விதிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. தேர்தல் பறக்கும் படையும், நிலையான கண்காணிப்புக்குழுவும் மாவட்டங்களில் சோதனை செய்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

இதன்படி 20.04.2016 அன்று பறக்கும் படையினர் வாகன சோதனை மேற்கொண்டபோது, கிருஷ்ணகிரியில் ஆவனங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.3.72 லட்சம் ரொக்கம், வேலூா் மாவட்டத்தில் இருசக்கர வாகனத்திற்கான ரூ.7 லட்சம் மதிப்புள்ள 1400 டயர்கள், ரூ.10 லட்சம் மதிப்புள்ள 2880 பருத்தியிலான லுங்கிகள், சேலம் நகர் பகுதியில் ரூ.5 லட்சம் ரொக்கம், மதுரை நகர் பகுதியில் 408 வெட்கிரைண்டர்கள், கரூர் மாவட்டத்தில் ரூ.10 லட்சம் ரொக்கம், விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.28 லட்சம் ரொக்கம் உட்பட மொத்தம் ரூ.54,39,775/– பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் நிலையான கண்காணிப்புக்குழு (SST) சோதனையில் 20.04.2016 அன்று சேலத்தில் ரூ.10 லட்சம் ரொக்கம் கிருஷ்ணகிரியில் ரூ.3.77 லட்சம் வேலூாில் 120 அரிசி மூட்டைகள் மற்றும் 2.70 ரொக்கம் அரியலூர் மாவட்டத்தில் ரூ.2.55 லட்சம் திருவண்ணாமலை மாவட்டத்திலி ரூ.6.89 லட்சம், திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.2.50 லட்சம், விழுப்புரத்தில் ரூ.2.70 லட்சம் மதிப்பிலான 9.50 கிலோ வெள்ளி பொருட்கள் உட்கட மொத்தம் ரூ.36,12,540/– பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை ரூ.30,22,96,585/– ரொக்கம் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

*************